978

உ
சிவமயம்

திருவிற்குடித் தல வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 SEP 1955
MADRAS
978
3-55

ருவிற்குடி 1955

Q23:3ऽ.21193.ட
N55
12775

உ

சிவமயம்

திரு விற்குடித் தல வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 SEP 1955
MADRAS

*

திருவாரூர்
கழக உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழ் ஆசிரியர்
வித்வான் திரு. மு. இரத்தின தேசிகர்
அவர்களால் எழுதப் பெற்று;

திரு விற்குடி வீரட்டானேஸ்வரர் ஆலய டிரஸ்டி,

பள்ளத்தூர்
திரு. சொ.மு.அ.மெ.ராம. இராமசாமிச் செட்டியார்,

திருப்பணி டிரஸ்டி
திரு. சொ.மு.அ.மெ.அரு. இராமசாமிச் செட்டியார்
என்கிற நடேசன் செட்டியார்,
என்ற இவர்களால் வெளியிடப் பெற்றது.

திருவிற்குடி
1955

விலை அணா 12

Q23:38.211193-Tr
N55

TAMIL NADU ARCHIVES LIBRARY
112775

NATIONAL ART PRESS, TYENAMPET, MADRAS.

திருக்கயிலாய பரம்பரை, திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி மஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளிய

மதிப்புரை

தமிழகம் தெய்வ மணம் கமழும் திருநாடு. இறை மணம் கமழும் இன்பத் திருநாடு. தமிழர்தம் வாழ்வில் கடவுள் நம்பிக்கையும், வழிபாட்டு உணர்ச்சியும் சரித்திரத் திற்கு முன் தொட்டே தொடங்கி வளர்ந்து வளம் பெற்று வந்துள்ளன. தமிழினத்தின் பேரறிவிற் பூத்துக் காய்த்ததே பொலிவுடைச் சைவத்திருநெறி. தமிழினத்தின் தனி நெறியும், தவநெறியும் ஆன சைவத்திருநெறியின் சிறப் பியல்புகளைத் தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின் றன. சைவத்திருநெறியே "நன்மை பெருகு அருள் நெறி" என இந்நாட்டவர்களால் கைக்கொள்ளப் பெற்றது. வாழ்வொடு கலந்த வழிபாட்டுணர்ச்சியுடைய பழந்தமிழ் மக்கள் விண்ணளாவிநின்று வானைமறைக்கின்ற திருக் கோயில்கள் பலவற்றை எடுத்தனர். பேணிவளர்த்தனர். பாதுகாத்து வருகின்றனர். இத்தகு திருத்தலங்களுள் திருவிற்குடியும் ஒன்று.

இத்திருத்தலம் சிறப்பு நலங்கள் பல பொருந்தியது. குறிப்பாக இத்திருத்தலம் தமிழினத்தின் வாழ்வுக்கு ஓர் எடுத்துக் காட்டு. ஆண்மையிற் சிறந்து வாழ்ந்த தமிழினம் நல்லன வல்லாதன தமிழகத்திற் தலையெடுக்க ஒருபோதும் இடங் கொடுத்ததில்லை. இதற்குச் சான்று வீரட்டானத் திருத்தலங்கள். அறத்துறை துறந்து அல்லாதன பல விளைவித்த மாக்களை ஆண்டவன் ஒறுத்து அடக்கி அருளிச் செய்து ஆண்டமையே இத்திருத்தலங்களின் தத்துவம்.

சலந்தரனைத் திருத்திய திருத்தலமே திருவிற்குடி. இங்கு நம்மனோர் உய்வதற்காக திருஉருக்கொண்டு எழுந்தருளி இருக்கும் திருஉருவங்கள் காண்தொறும் கண்களுக்கும், கருத்துக்கும் நல்லின்பம் நல்கி ஆராத இன்ப அன்பில் நம்மை வாழ்விக்கின்றன.

பண்டு முடியுடை மூவேந்தர்கள் திருக்கோயில்கள் எடுத்தனர். பின்னர் வள்ளல்கள் எடுத்தனர். இந்த நூற்றாண்டில் திருக்கோயில்களை எடுத்தும், புதுப்பித்தும் நல்லருள் நெறியைக் காத்து வருகின்ற பெருமை நாட்டுக் கோட்டை நகரத்தார்கட்கே உரியது.

இத்திருத்தலத்தைப் **பள்ளத்தூர் திரு. சொ. மு. அ. மெய்யப்பச் செட்டியார் அவர்களின் குடும்பத்தினர்** பல ஆயிர வெண் பொற்காசுகளைக் கொண்டு புதுப்பித்திருப்பது தமிழ்ச் சைவப் பெருமக்களால் என்றும் மறக்க முடியாததொன்று. பொன்னும், பொருளும் தந்த இறைவனுக்குப் பூவொடு புனல் தந்து வழிபாட்டு நிகழ்ச்சிகளைச் செம்மைபட நடத்தி வைக்கும் ஆலய நிர்வாகத் துறையினரின் சேவை பாராட்டத் தக்கது.

எதையும் அறிமுகப்படுத்துவதற்கு ஓர் புலவர் தேவை. இத்திருவிற்குடித் திருத்தலத்தை நம்மனோருக்கு அறிவித்து திருவீரட்டானேஸ்வரரைச் சென்று வழிபட்டு வளம்பெற நம்மை ஆற்றுப்படுத்துகின்ற தொண்டர், அருள் நெறிச் செல்வர் **திரு. மு. இரத்தின தேசிகர்** இவ்வரலாற்றை எழுதியதன் மூலம் நற்பணி செய்துள்ளார். இது பாராட்டத் தக்கது.

இத்திரு நூலைப் படித்துப் பரமனடி பேணிச் சிவ நெறிச் செல்வர்கள் பயன் பெறுவார்களாக!

வாழ்க தமிழினம்! வளர்க அருள் நெறி!

முன்னுரை

(நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை)

'தெய்வம் திகழும் திருநாடு' என்று தமிழ்நாட்டைப் போற்றுவதற்குக் காரணம் தமிழ்நாட்டிலுள்ள திருக் கோயில்களின் சிறப்பேயாகும். தமிழ் நாட்டைப் போல் தேவாலயங்கள் மிகுந்த நாடு வேறொன்றும் இல்லை என்பது வெறும் உண்மை. கோயிலில்லா ஊரே இல்லையெனும்படி எண்ணிறந்த ஆலயங்கள் இருப்பதுமட்டும் அல்ல. இவ் வாலயங்களிற் பல விலைமதிக்க முடியாத வேலைப்பாடுகளும் சித்திரச் சிற்பச் சிறப்புகளும் உள்ளன.

எந்திரத் தந்திர சாதனங்களில்லாத பழங்காலத்திற் கட்டப்பெற்ற இந்தக் கோயில்களின் கோபுரங்களின் உயர்வும் ஆலயங்களின் அகலமும் சுவர்களின் திண்மையும் சிலைகளின் கலையும் இக்காலத்து 'எஞ்சினியர்களையும்' திகைத்து வியக்கச் செய்வனவாகும்.

மூவேந்தர் ஆட்சியில் பல்வேறு காலங்களிற் கட்டப் பட்ட இவ்வாலயங்களிற் பல, பிற்காலத்தில் பராமரிப்புக் குறைவால் பழுதுபட்டுவிட்டன. இப்படிப் பழுதுபட்டுக் கிடந்த பற்பல ஆலயங்களையும் புதுப்பித்த புகழும் புண் ணியமும் நாட்டுக்கோட்டைத் தனவணிகச் செட்டிமார் களையே சேரும்.

அப்படிப்பட்ட திருத்தலங்களுள் விற்குடி ஒன்று. இது சோழநாட்டில் காவிரி யாற்றின் தென்கரையில் உள்ளது. இது, மக்களுக்குத் தீங்கு செய்வதே தொழிலாகக் கொண் டிருந்த ஜலந்தரன் என்ற அசுரனைக் கொன்ற இடம் என்றும், அப்படி ஜலந்தரன் வதையுண்டபோது திருமா லின் வில் கீழே விழுந்த இடமானதால், இதற்கு வில்குடி - விற்குடி என்ற பெயர் உண்டாயிற்றென்றும் இத்தலத்தின் வரலாறு கூறுகின்றது. 'திட்டு' என்றும் 'திட்டை' என்

றும், 'கோத்திட்டை' என்றும் கூறப்படுகிற இந்த விற்குடி, தமிழ் நாட்டிலுள்ள 'அட்டவீரட்டங்கள்' என்று போற்றப்பட்டு வந்துள்ள எட்டுத் தலங்களில் ஒன்று. மூவர் தேவாரங்களிலும், சேக்கிழார் பெரிய புராணத்திலும், அருணகிரிநாதர் திருப்புகழிலும் பாடல் பெற்றுள்ள பழம் பெருமை வாய்ந்தது விற்குடிச் சேத்திரம்.

அத்தகு விற்குடி ஆலயத்தைப் புதுப்பிக்கும் திருப்பணியை மேற்கொண்டவர்கள் **பள்ளத்தூர் திரு. சொ. மு. அ. மெய்யப்பச் செட்டியார் அவர்களின் குடும்பத்தினர்.** இக்குடும்பத்தார் 1917-ம் ஆண்டில் இத்திருப்பணியைத் தொடங்கி 1931-ம் ஆண்டுவரை சுமார் பதினைந்து ஆண்டுகள் இடைவிடாது கண்காணித்து ஏராளமான பொருட் செலவில் திருக்கோயிலை மிகவும் திறம்படப் புதிதாக வமைத்து ஐந்து கால பூசைகளும் குறைவற நடந்துவரப் போதுமான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவைத்ததன்றி, இப்போதும் இக்குடும்பத்தைச் சேர்ந்த **திரு. சொ. மு. அ. மெ. இராமசாமிச் செட்டியாரவர்களும் திரு. சொ. மு. அ. மெ. அரு. இராமசாமிச் செட்டியார் என்ற நடேசன் செட்டியாரவர்களுமே** ஆலய நிர்வாகத்தை மிகவும் பக்தியுடன் நடத்தி வருகிறார்கள். அவர்களை மனமார வாழ்த்துகின்றேன்.

இவர்களுடன், இந்தத் தலத்தின் அழகான இயற்கையமைப்பையும் இதைச் சூழ்ந்துள்ள பல இடங்களின் சிறப்புகளையும் திருப்பணிகளின் அருமை பெருமைகளையும் நன்றாக விளக்கி, அழகான தமிழில் இதன் தல புராண வரலாறுகளை எழுதியிருக்கிற திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர் **திரு. வித்வான் மு. இரத்தின தேசிகரவர்களை** மிகவும் பாராட்டி மனமார வாழ்த்துகின்றேன். இந்தத் தலப்புராணத்தை எழுதச் செய்வதிலும் வெளிவரச் செய்வதிலும் ஊக்கத்துடன் பணி புரிந்த **பள்ளத்தூர் திரு. சொ. ராம. இராமசாமிச் செட்டியாரவர்களையும், திரு. ராம. சொ. சோலையப்பச் செட்டியாரவர்களையும்** மனமார வாழ்த்தி இறைவனை வணங்குகிறேன்.

வெ. இராமலிங்கன்



அட்டவீரட்டம்

அட்டவீரட்டம்

அட்ட வீரட்டம்

" பூமன் சிரம்கண்டி அந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன்கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே."

சிவபெருமானின் வீரச்செயல்கள் எட்டு

1. திருக்கண்டியூரில் —பிரமனது சிரங்கள் ஐந்தில் ஒன்றை நகத்தால் கொய்தார்.
2. திருக்கோவலூரில்—தருகிவந்த அந்தகாசுரனை அழித்தார்.
3. திருவதிகையில் —திரிபுர அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் அழித்தார்.
4. திருப்பறியலூரில் —தன்னை அவமதித்த தக்கனை வீரபத்திரரால் ஒறுத்துஆட்டுத் தலையை அவனுக்கு அளித்தார்.
5. திருவிற்குடியில் —சலந்தரன் என்ற அசுரனைச் சக்கரத்தால் பிளந்தார்.
6. திருவழுவூரில் —யானை உருக் கொடுவந்த அரக்கனை அழித்துத் தோலைப் போர்த்தினார்.
7. திருக்குறுக்கையில்—காமனைக் கண்ணழலால் காய்ந்தார்.
8. திருக்கடவூரில் —மார்கண்டேயருக்காகக்காலனைக் காலால் உதைத்து அழித்தார்.

சிவமயம்

திரு விற்குடித் தல வரலாறு

செல்வ விநாயகர் துதி

"திருமலியும் விற்குடியிற் சேர்ந்துபணி அன்பருள்ளம்
ஒருமையுட னின்பமுற உலகினிட்ட சித்திதரும்
ஒருபிரண வப்பொருளா வோங்குசித்தி புத்தியர்கள்
மருவுசெல்வ விநாயகனை வணங்கியடி வாழ்த்துவமே".

சுப்பிரமணியர் துதி

"வில்லோங்கு விற்குடி வாழ்வீரட்ட நாதரிடத்
தில்லோங்கு மேலவார்குழ லன்னை யீன்றருளுங்
கல்லோங்க லார்குமரன் கயவல்லி மான்மகள்சேர்
மல்லோங்கு திண்புயத்தெம் வடிவேல னடிபோற்றி".

வீரட்டேசுரர் துதி

"திருவும்உரை மகளும்நிறை சொம்பொன் மணிமாடம்
மருவும்ஒரு திருவிற்குடி வளமுற்றிடு தளியின்
வருவாரருள் பெறவேதரு வயவீரட்ட நாதன்
இருதாண்மல ரெணிநா மலர்இட்டுப் பணிவோமே".

ஏலவார்குழல் அம்பாள் துதி

"கங்கையா றறுகு கொன்றைகூவிளமுங்
கவின்றரு தும்பைகா ரவுந்
திங்களு மணிந்து திருவருள்புரியும்
விற்குடி வீரட்டம் திகழும்

சங்கரநாம வீரட்ட நாதன்
தனக்கொரு பாகத்தி லமர்ந்து
மங்கள நல்கு லமலவார்குழலி
மலரடி யனுதினம் பணிவேம்''.

பிருந்தா லிங்கமென்னும் திருமயான ஈசுவரர் துதி

பெருமைசேர் விற்குடியில் பேசுதிரு
மெய்ஞ்ஞான சுவாமி யென்னுந்
தருவைநிக ரெம்பெருமான் சலந்தரன்வி
ழிடத்தொளிருஞ் சம்பு நாதன்
கருவையுரு தடியவர்க டனையடையக்
காதலுட னருளு மூர்த்தி
குருவைநேர் கொண்டிலகும் பிருந்தைலிங்கப்
பெருமானைக் கூடி வாழ்வோம்

தலம்

பொழில் வளம் மிகுந்த எழில்மிகு சோழ நாட்டில் மழை வளஞ் சுருங்கினும் மணிநீர் வளம் பெருக்கிப் பல கால்களாய்ப் பாய்வது காவிரியாறு. இக்காவிரியாற்றின் இருகரை மருங்கினும் ஏற்றமுற்று விளங்கும் சிவத்தலங்கள் மிகப் பல. இச்சிறப்பி ஞலேயே "திசையனைத்தின் பெருமையையும் தென் திசையே வென்றேறிற்று", "மாதவம் செய்த தென் திசை" என்று ஏத்தெடுக்கப்பெறுவதாயிற்று. "தென் ஞடுடைய சிவனே போற்றி" என்ற மணி மொழியும் பிறந்தது.

நாடுகள் பலவற்றுள்ளும் மூவராலும் பாடப் பெற்ற தலங்கள் 274 உள்ளன. இத்தலங்கள் பல வற்றுள்ளும் மூவராலும் பாடப் பெற்றுச் சோழ நாட் டில் அமைவன 190 ஆகும். இவற்றுள் காவிரியின் வட கரையில் அமைந்துள்ளவை 63. காவிரியின் தென் கரையில் அமைந்துள்ளவை 127 என்பதை நோக்கும்பொழுது சோழநாட்டின் பெருமையை எவ் வாறு புகழ்வது!

காவிரியின் தென் கரையில் அமைந்த தலங்களில் திருவிற்குடி ஒன்று. விற்குடி, தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலூகாவில் அமைந்துள்ள ஓர் இயற்கை எழில்வாய்ந்த இடம். மாயவரம்—காரைக்குடி புகை வண்டிப் பாதையில் திருவாரூர்ப் புகைவண்டி நிலே யத்திற்கு வடக்கே 5 கல் தொலேவில் உள்ளது

விற்குடி புகைவண்டி நிலையம். இந் நிலையத்திலிருந்து கிழக்கு நோக்கி நாகூர் செல்லும் கற்சாலையில் சுமார் 1 மைல் தொலைவில் உள்ள கல்யாணி இருப்பு என்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கி இத்தலத்திற்குச் செல்லும் தனிச் சாலை அமைந்துள்ளது. இச்சாலையின் நீளம் 1 மைல். ஊரின் தென்மேற்கு மூலையிலுள்ள விளப்பாற்றுப் பாலத்தைக் கடந்து 1 பர்லாங் தூரம் வடக்கு நோக்கிச் சென்றால் கோயிலின் முன்புறம் உள்ள சங்க தீர்த்தத்தை அடையலாம். இத்தீர்த்தத்தின் கீழ்பால் மேற்கு நோக்கி அமைந்துள்ளது வீரட்டானேஸ்வரர் ஆலயம்.

இத்தலத்தைச் சூழ அமைந்துள்ள தலங்கள்

விற்குடிக்கு வடமேற்கே நன்னிலத்துப் பெருங் கோயிலும்; வடக்கே திருப்பனையூர், திருப்புகலூர், அம்பர் மாகாளம் என்ற தலங்களும்; கீழ்த் திசையில் திருப்பயற்றங்குடி, திருச்செங்காட்டங்குடி, திருமருகல் என்ற தலங்களும்; தென் திசையில் திருப்பள்ளி முக் கூடலும்; தென் மேற்குத் திசையில் திருவாரூரும்; மேற்றிசையில் திருவாஞ்சியமும் பாடல் பெற்ற தலங் களாக விளங்குகின்றன.

இயற்கை அமைப்பு

இயற்கை எழில்மிக்க இடங்களிலேயே இறைவன் விரும்பி எழுந்தருளியிருக்கிறான். திருமுருகாற்றுப் படையில்,

''காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பு
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்''

ஆகிய இடங்களில் வழிபடுவார்க்கு முருகன் காட்சி யளிப்பதாக நக்கீரர் கூறுகின்றார். நம் பண்டைக் காலப் பெரியவர்களும் மலை, வனம் என்கிற இயற்கை வனப்பு மிக்க இடங்களுக்குச் சென்றே தவ நெறியில் நிற்பாராயினர். அப்படியே இறைவனும் அருவுருவத் திருமேனி தாங்கி ஆன்ம கோடிகள் உய்யும் வண்ணம் இயற்கை எழில்மிக்க இடங்களில் திருக்கோயில் கொண்டு அருள்பாலிக்கின்றான். திருவிற்குடி வீரட் டானேஸ்வரரும் அவ்வண்ணமே இயற்கை எழில் மிக்க இப்பதியில் வீற்றிருந்து அருளுகின்றார். இத் தலத்திற்கு வழங்கும் திருப் பெயர்களுள் "திட்டை" என்பது ஒன்று. இதனையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் "கோத்திட்டையும் கோவலும் கோயில் சொண்டீர்" என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் "கோத்திட்டைக் குடி வீரட்டானம்" என்றும் கூறுவாராயினர். "திட்டு" என்ற சொல் மேடான இடத்தையும் ஆற்றின் இடையே உள்ள ஒரு சிறு நிலப் பகுதியினையும் உணர்த்தும். விற்குடி வீரட்டமும் இரண்டு ஆறு களுக்கு இடையே உள்ள ஒரு நிலப் பகுதியேயாகும். ஊரின் தென் எல்லையில் விளப்பாறு (ரக்த நதி) என்ற ஓர் ஆறும்; வட எல்லையில் பில்லாலி ஆறு என்ற ஓர் ஆறும் ஓடுகின்றன. இவ்விரண்டிற்கும் இடைப் பட்ட நிலப் பகுதியே திட்டு என்று முதலில் வழங்கப் பெற்றுப் பின்னர் திட்டை என்று வழங்கப்பெறுவ தாயிற்று. பின்னர் திட்டை என்ற சொல்லின் முன் னர் "கோ" என்ற சொல்லும் சேர்ந்து "கோத்திட்டை" யென வழங்கப் பெறுவதாயிற்று. "கோ" என்ற சொல் தலைமை, முதன்மை என்ற பொருள்களைத் தரும். எனவே "கோத்திட்டை" என்ற தொடர் இரண்டு ஆறு

களுக்கு இடையே உள்ள சிறந்த முதன்மையான நிலப் பகுதி என்ற பொருளைத் தருகின்றது.

ஊரின் நாற்புறத்தேயும் பசுமை தவழும் நெல் வயல்கள் பரவியுள்ளன. தென்னை, மா முதலிய மரங்கள் வானுற வளர்ந்து வனப்பூட்டுகின்றன. மணங் கமழ் மல்லிகை, முல்லை முதலிய கொடிகள் மலிந்த பூஞ்சோலைகளும் என்றும் நறுமணத்தைத் தந்துகொண்டிருக்கின்றன. வண்டுகள் இசை முரலு கின்றன. நேரத்துக்கு ஒரு குரலோசையை எழுப்பும் பல வகைப் பறவையினங்களின் பாட்டொலி கேட் போருள்ளத்திற்குப் பெருங் களிப்பை ஊட்டுகின்றது. இத்தனை இயற்கை வளங்கள் வாய்க்கப்பெற்ற திரு விற்குடி வீரட்டானத்தை இயற்கை அன்னையின் எழிற்பூங்கோயில் என்று சொல்வதைத் தவிர வேறு சொல்வதற்கில்லை. திருஞான சம்பந்த சுவாமிகளும் தமது திருப்பதிகத்தில் "விரியும் மாமலர்ப் பொய்கை சூழ் வீரட்டம்" என்றும் "விண்ணில் ஆர் பொழில் மல்கிய மலர் விரிவிற்குடி வீரட்டம்" என்றும் போற்றிப் புகழ்ந்திருக்கின்றார்கள்.

பிற குறிப்புகள்

இத்தலத்தில் சுமார் 75 வீடுகள் உள்ளன. இங்கே 400-க்குக் குறையாத ஜனத் தொகை உண்டு. ஊரின் நலத்தைப் பார்ப்பதற்கு என பஞ்சாயத்து போர்டு ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. கோயிலின் டிரஸ்டி அவர்களால் நடத்தப்பெறும் இலவச ஆரம்பப் பள்ளி ஒன்று வடக்கு வீதியில் அமைந்து உள்ளது. பள்ளியில் ஐந்து வகுப்புகள் உள்ளன. அறுபதுக்கு

மேற்பட்ட பிள்ளைகள் பயில்கிறார்கள். இரண்டு ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். பள்ளிக்கூடத்தின் கீழ்ப் பக்கமாக இவ்வூரிற்கென அமைந்த தனி போஸ்டாபீஸ் ஒன்று இருக்கிறது. போஸ்டாபீஸிற்குக் கீழ்ப் புறத்தில் திரு. சொ. மு. அ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் குடும்பத்தார் பங்களா அமைந்துள்ளது.

கோயிலின் தோற்றம்

கோயில் ஊரின் நடுவே மேற்கு நோக்கி அமைந்துள்ளது. தென்னாட்டிலே திகழும் அட்ட வீரட்டானங்களில் திருவழுவூர், திருவதிகை என்ற இரண்டு தலங்களிலும் கோயில்கள் கிழக்கு நோக்கியே அமைந்துள்ளன. ஏனைய ஆறு தலங்களுள்ளும் கோயில்கள் மேற்கு நோக்கியே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். தெற்கு வடக்கு வீதிகள் நீண்டும் கிழக்கு மேற்கு வீதிகள் குறுகியும் அமைந்துள்ளன. ஆலயம் கிழக்கு மேற்கு நீளம் 302 அடியாகவும் தெற்கு வடக்கு அகலம் 151 அடியாகவும் அமைந்துள்ளது. ஆலயத்தை அடுத்துச் சுமார் 40 அடி அகலத்தில் இரண்டாவது பிராகாரம் அமைந்துள்ளது. வீதிக்கும் இரண்டாவது பிராகாரத்திற்கும் இடையே நாற்புறத்தும் இரும்புக் கம்பிகளால் வேலி இட்டிருப்பது மிக்க அழகினைத் தருகிறது. வேலியின் உட்புறத்தே தென்னை மரங்களும் அலரிச் செடிகளும் அமைந்திருப்பது பெருவனப்பினைத் தருகிறது. கோவிலின் முன்புறத்தே சுமார் 200 அடி உயரத்தில் வேலைப்பாடமைந்த கோபுரம் இருக்கிறது. ஏனைய மூன்று பக்கங்களிலும் கோபுரங்கள் இல்லை. கோவிலின் முன்புறத்தே சங்க தீர்த்தம் அமைந்துள்

ளது. சங்க தீர்த்தத்திற்கும் இரும்பு வேலியிடப் பெற்றுள்ள இரண்டாவது பிராகாரத்திற்கும்இடையே இலவ மரங்கள் வரிசை வரிசையாகப் பசுமை தவழ உயர்ந்து நிற்கும் காட்சி கண்டாரை வசப்படுத்து கின்றது. சங்க தீர்த்தத்தின் கீழ்க் கரையிலே தென் புறமாகக் கோயிலை நோக்கிய தனி விநாயகர் ஆலயம் ஒன்று அமைந்துள்ளது. சங்க தீர்த்தம் நாற்புறமும் கருங்கல் சுவர்களைக் கொண்டு விளங்குகின்றது. தீர்த் தத்தின் நாற்புறமும் படித்துறைகள் அமைந்துள்ளன. கடுங் கோடையிலும் நீர் வற்ருதபடி குளம் அகழப் பெற்றிருக்கிறது. இரண்டாவது பிராகாரத்தில் வாயு மூலையில் ஒரு கிணறு அமைந்துள்ளது. கோயிலின் கீழ்ப்புறத்தே சக்கர தீர்த்தம் அமைந்துள்ளது,

கோயிலின் உள் அமைப்பு

கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றவுடன் இடது கைப்புறமாகத் தெற்கு நோக்கியிருக்கும் ஏல வார் குழல் அம்மையின் சந்நிதியைக் காணலாம். அதற்கு அடுத்துக் கிழக்கே ஸ்ரீ வீரட்டானேஸ்வரரின் சந்நிதியில் கொடிமரம், பலிபீடம், நந்தி அமைந்திருக் கின்றன. இவற்றிற்குக் கிழக்காக 3 அடி உயரத்தில் மஹாமண்டபம் அமைந்துள்ளது. அர்த்த மண்டபம் அதற்கு அடுத்தபடி அமைந்துள்ளது. அர்த்த மண்ட பத்தை அடுத்து ஸ்ரீ வீரட்டானேஸ்வரர் வீற்றிருந் தருளுகிருர். ஏலவார் குழலம்மையின் கோயிலை யடுத்து வடக்குப் பிராகாரத்தில் தெற்கு நோக்கி சம்ஹாரமூர்த்தி உற்சவராகக் காட்சியளிக்கின்ருர். அடுத்தபடி கிழக்காகப் பள்ளியறையும் வாகனங்களும் அமைந்துள்ளன.



சுப்பிரமணியர்



சோமாஸ் கந்தர்

கிழக்குப்பிராகாரத்தின் வடகோடியில் நவக்கிரகங்களின் சந்நிதி உள்ளது. இதையடுத்து சூரியன் சந்நிதியும் யாகசாலையும் அமைந்துள்ளன. அடுத்த படியாக மூன்று அறைகள் உள்ளன. இவற்றையடுத்து சந்திரன் சந்நிதியும் மடைப்பள்ளியும் அமைந்துள்ளன. தெற்குப் பிராகாரத்தின் கீழ்க்கோடியில் ஞானதீர்த்தம் கிணருக அமைந்துள்ளது. மேற்கோடியில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார் திருவுருவங்கள் அமைந்துள்ளன. மேற்குப் பிராகாரத்தின் தெற்குக்கோடியில் பிரதான விநாயகர் சந்நிதி உள்ளது. கோபுரத்தை யடுத்துச் சோமாஸ்கந்தர், உற்சவராக உள்ள பஞ்சமூர்த்திகளின் சந்நிதிகள் அமைந்துள்ளன.

ஏலவார் குழல் அம்மையின் கோயிலுக்கு மேல் புறமாகக் கிழக்கு நோக்கி இலக்குமியின் சந்நிதியும் சுப்பிரமணியரின் சந்நிதியும் அமைந்துள்ளன. வடக்குப் பிராகாரத்தின் கீழ்க்கோடியில் உள்ள பைரவர் சந்நிதியின் வலதுபுறத்தில் சனிபகவானின் தனித் திருவுருவம் ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளது. தென் புறத்தில் பைரவர் உருவமும் இவற்றிற்கு எதிரே ஒரு மகாலிங்கத் திருவுருவமும் அமைந்துள்ளன. வீரட்டான ஈஸ்வரர் ஆலயத்தின் வடபுறத்தில் துர்க்கை சண்டிகேஸ்வரர் திருவுருவங்கள் காட்சியளிக்கின்றன. கர்ப்பக்கிரகத்தின் வடபுறத்தில் பிரம்மாவின் திருவுருவமும் கீழ்ப்பாகத்தில் மகாவிஷ்ணுவின் திருவுருவமும் அமைந்துள்ளன. வீரட்டானேஸ்வரர் ஆலயத்தின் தென்புறத்தில் கீழ்ப்பாகமாக தக்ஷிணமூர்த்தியின் திருவுருவமும் மேற்கே நர்த்தன விநாயகரின் திருவுருவமும் அமைந்துள்ளன.

தெற்குப் பிராகாரத்தில் உள்ள, ஞானதீர்த்தத்தின்மேற்குப்புறமாக வடக்கு நோக்கிய பிடாரியின் திருவுருவமும் கிழக்கு நோக்கிய மாரியம்மன் திருவுருவமும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்; இப்பிராகாரத்திலேயே மஹாமண்டபத்தை அடுத்த தூண் ஒன்றில் ஆஞ்சநேயரின் திருவுருவம் ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. அர்த்தமண்டபத்தை ஒட்டி மஹாமண்டபத்தின் இரண்டு பக்கங்களிலும் துவாரபாலகர்களின் திருவுருவங்கள் அமைந்துள்ளன. வாயிலின் வலதுபுறமாக வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியரின் திருவுருவமும் இடதுபுறமாக விநாயகர் திருவுருவமும் அமைந்துள்ளன.

அர்த்த மண்டபத்தில் தெற்கு நோக்கி நடராஜப் பெருமானின் திருவுருவம் அமைந்துள்ளது. நடராஜருக்கு இடதுபுறத்தில் சிவகாமி அம்மன் உருவமும் பிக்ஷாடனர் உருவமும் சிறிய சுப்பிரமணியர் உருவமும் உற்சவராக அமைந்துள்ளன. மேற்கு நோக்கிப் பிரதோஷ விநாயகர் வீற்றிருக்கிறார். வலது கைப்புறத்தில் மாணிக்கவாசக சுவாமிகள், ஆடிப்பூர அம்மன், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவுருவங்கள் உற்சவராக அமைந்துள்ளன.

மூர்த்தி

இத்தல மூர்த்தியின் பெயர் ஸ்ரீ வீரட்டான ஈஸ்வரர். வீரத்தானஈஸ்வரர் என்பதே பிற்காலத்தில் வீரட்டான ஈஸ்வரர் எனத் திரிந்து இருக்கலாம். வீரத்தானம் என்பது வீரச்செயல் செய்த இடம் என்று

ஸ்ரீ வீரட்டான ஈஸ்வரர்

ஏலவார் குழலி

பொருள்படும். சலந்தரன் என்ற அசுரனைச் சம்ஹரித்த வீரச்செயல் நிகழ்ந்த இடம் இது ஆதலால் இப்பெயர் அமைவது பொருத்தமுடையதேயாகும். கண்டியூர் முதலிய தலங்களிலும் இறைவன் வீரச் செயல்களைச் செய்திருக்கின்றார் ஆதலால் அவைகளும் வீரட்டானங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. வீரட்டானம் என்ற சொல்லே வீரட்டம் என மருவிற்றுப்போலும். சலந்த ராரி, வீரட்டேசுவரர் என்ற மறு பெயர்களும் மூர்த்திக்கு வழங்கப்படுகின்றன.

அம்பிகை

இத்தல அம்பிகையின் பெயர் ஏலவார் குழலி என்பது. ஏலம் என்பது பெண்கள் கூந்தலுக்கு அணியும் மயிர்ச்சாந்து என்று பொருள்படும். எனவே மயிர்ச் சாந்து அணிந்த நீண்ட கூந்தலை உடையவள் என்பது இத்தொடரின் பொருளாகும். மைவார்குழலி, பரிமள நாயகி என்று வழங்கும் பெயர்களும் இப் பொருளையே தருகின்றன. அம்பிகையின் வலது திருக்கரங்களில் மேற்கரத்தில் ஜபமாலை இருக்கிறது. மற்றொருகரம் அபயாஸ்தமாக இருக்கிறது. இடது திருக்கரங்களில் மேற்கரம் தாமரை மலரை ஏந்தி இருக்கின்றது. மற்றொன்று தொடையில் அமைந்திருக்கின்றது.

விநாயகர்

இக்கோயிலின் பல பகுதிகளில் விநாயகப் பெருமானுக்குத் திருவுருவங்கள் அமைந்துள்ளன. தக்ஷிணாமூர்த்தியை அடுத்து எழுந்தருளி யிருக்கும் விநாயகரை நர்த்தன விநாயகர் என அழைப்பர். பண்டரங்கம் முதலிய கூத்துக்களை இறைவன் ஆடுவது

போலவே மூத்த பிள்ளையாரும் கூத்தாடுவது இயற்கைதானே! தம் தந்தையார் சலந்தரனைக் கொன்ற வீரச்செயலைக் கண்டு மகிழ்ந்து அன்று கூத்தாடியதால் நர்த்தன விநாயகர் என்று பெயர் பெற்றார் போலும். அர்த்த மண்டபத்தின் முன்னே இடது கைப்புறமாக வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் பெயர் அனுக்ஞை விநாயகர் என்பது ஆகும். திருக்கோயில் விழாக்கள் முதலியன நிகழும்பொழுது இப்பெருமானிடம் முதலில் அனுக்ஞை பெற்று மறு நிகழ்ச்சிகளைத் தொடங்கும் வழக்கம் உள்ளதால் இப்பெருமானுக்கு இப்பெயர் அமைந்தது போலும். செல்வவிநாயகர் சங்கதீர்த்தக் கீழ்க்கரையில் காட்சி தருகிறார்.

சங்கார மூர்த்தி

திருச்சிக்கலுக்குச் சிங்காரவேலர் ஏற்றமளிப்பது போன்றும், வயித்தீஸ்வரன் கோயிலுக்கு முத்துக்குமாரஸ்வாமி உயர்வு அளிப்பதைப் போன்றும், இத்தலத்திற்கு உற்சவராக உள்ள சங்காரமூர்த்தி பெருமை தருகின்றார். இடது கரம் ஒன்றில் மான் கன்றைத் தாங்கி, மற்றோர் இடது கரத்தால் முத்திரை கொடுத்து, வலது கரம் ஒன்றில் சக்கரமும், மற்றொன்றில் மழுவும் கொண்டு நின்ற திருக்கோலத்தில் பெருமான் காட்சி கொடுக்கின்றார். வலது கரத்தால் சின் முத்திரை தரும் பெருமான் சலந்தரனைச் சங்கரிக்கும் வீரச்செயலைச் செய்யத் தொடங்கியபொழுது முத்திரை காட்டும் செயலை இடது கரத்திற்குத் தந்தார் போலும். வீரச்செயல் செய்வதற்கு அறிகுறியாக வலக் கரங்களில் சக்கரம் மழு என்ற ஆயுதங்களைத் தாங்குகின்றார்.



சங்கார மூர்த்தி



சங்க தீர்த்தம்

சக்கர தீர்த்தம்

தீர்த்தம்

ஆலயத்தின் உட்புறம் தென் கீழ்மூலையில் ஞான தீர்த்தம் கிணருக அமைந்துள்ளது. இத்தீர்த்தம் கல்லாலின் கீழமர்ந்து நான் மறை ஆறங்கம் முதலியவற்றை ஓதி உணர்ந்தும் உண்மை ஞானத்தைப் பெருது மயங்கி நின்ற சனகாதி முனிவர்களுக்கு உண்மை ஞானத்தினை இருந்தபடி இருந்து ஞானமுத்திரையால் உணர்த்திய தக்ஷிணுமூர்த்தியின் திரு முன்னர் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதில் மூழ்கினுர் அறிவு மயக்கம் நீங்கி, தெளிந்து, உண்மைஞானம் பெற்று இம்மை மறுமைப்பேறுகளைப் பெறுவார்கள். திருக்கோயிலின் முன்புறம் அமைந்திருப்பது சங்கதீர்த்தம். இது அட்டகுளம் என்றும் வழங்கப் பெறுகின்றது. கோயிலின் பின்புறம் திருமயானேஸ்வரர் கோயிலுக்கு முன்பாக சக்கரதீர்த்தம் அமைந்திருக்கிறது. திருமாலின் கையிலுள்ளனவாகிய சங்கு சக்கரம் என்பவற்றைப் பெயராகக் கொண்டு இத்தீர்த்தங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஊரின் தென்பால் ஓடும் வளப்பாறும் வடபால் ஓடும் பில்லாலி ஆறும் தீர்த்தங்களே. வளப்பாறு, " ரக்தநதி " என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. சலந்தராசுரனது உடலம் சக்கரத்தால் பிளப்புண்ட பொழுது உதிரம் ஆருகப் பெருகியதை உணர்த்தவே இத்தீர்த்தம் அமைந்தது போலும்.

தலவிருக்ஷம்

இத்தலத்திற்கு உரிய தலவிருக்ஷம் துளசி என்று வழங்கப்படுகின்றது. ஆனல் கோயிலின் கீழ்ப்புறம்

திருமயானேஸ்வரர் கோயிலை அடுத்து ஒரு பெரிய அரசமரம் இருக்கிறது. திருமயானேஸ்வரர் கோயிலுக்கு வடபுறமாகப் பிருந்தாவனம் என்ற பெயரோடு துளசி மேடை அமைந்திருக்கிறது.

சுற்றுக்கோயில்கள் முதலியன

ஆலயத்தின் முன்னே சங்கதீர்த்தத்தின் தென் மேற்கு மூலையில் வீதிகளை அடுத்து ஐயனர் கோயில் ஒன்று அமைந்திருக்கிறது. இந்த ஐயனர் சொக்க நாதர் என்று அழைக்கப்படுகின்றார். சிறந்த வரதர். பக்தர்கள் இப்பெருமானை மிகுதியாகக் கொண்டாடி வழிபடுகிருர்கள். ஐயனர் ஊருக்குக் காவல் தெய்வம் ஆதலால் மக்கள் எல்லோரும் அவர் அருளை வேண்டி நிற்கிருர்கள். அவரும் அருள் புரிகிருர். சில இடங்களில் இருப்பதுபோன்று கோயில் கட்டடமாகஇல்லை. கொட்டகையாகவே இருக்கிறது. மிகப் பெரியதும் பழமை வாய்ந்ததுமான நருளிமரம் ஒன்று இவ்விடத்தே இருக்கிறது.

வீரட்டானேஸ்வரர் கோயிலின் கீழ்ப்புறத்தில் கிழக்குநோக்கிய சந்நிதியோடு திருமயானேஸ்வரர் ஆலயம் அமைந்திருக்கிறது. அது திருமெய்ஞ்ஞானேஸ்வரர் ஆலயம் என்று பொதுமக்களால் வழங்கப்படுகிறது. அட்டவீரட்டானங்களாக உள்ள தலங்களை நோக்கும் போது ஒவ்வொன்றின் பக்கத்திலும் திருமய னேஸ்வரர் ஆலயம் அமைந்திருக்கிறது. "காழிமயானம்!"— "வீழிமயானம்"—"கடவூர் மயானம்" என்ற தொடர்கள் வழக்கில் உள்ளதை நோக்கும்போது வீரட்டானங்கள் அல்லாத தலங்களை அடுத்தும் சில இடங்

களில் திருமயானேஸ்வரர் ஆலயங்கள் அமைந்திருப்பதை உணரலாம். இவற்றுள் கடவூர் அட்டவீரட்டங்களில் ஒன்ருகும். கடவூர் மயானம் திருஞான சம்பந்த சுவாமிகளாலும் திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப் பெற்ற தனிப்பதிகங்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இப்படி மயானேஸ்வரர் ஆலயங்கள் அமைந்திருப்பதன் கருத்தை நோக்கும்போது சர்வ சங்கார காலத்தில் உலகமே மயானமாகக் காட்சி யளிக்க, இறைவன் ஒருவனே ஏகனுகி நின்று, அந்தத் தைச் செய்த அவனே அனைத்திற்கும் ஆதியாகவும் இருந்து, சர்வ சிருஷ்டியைச் செய்வான் என்ற உண்மை புலனுகின்றது. அட்டவீரட்டானங்களிலும் இறைவன் ஒவ்வொரு சிறு சங்காரத்தைச் செய்திருப் பதால் அவ்விடங்களும் சிறுமயானங்களாகும் என்பதை உணர்த்தவே அவற்றை அடுத்து இப்படி மயானேஸ் வரர் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன போலும். இத்தலத்தில் சலந்தரன் என்ற அசுரனைச் சங்கரித்த மூர்த்தியே மயானேஸ்வரர் என்ற பெயர் தாங்கி சங்கரித்த அவ்விடத்திலேயே தனிக் கோயில் கொண்டு காட்சி யளிக்கின்ருர். வீரட்டானேஸ்வரர் தலத்திற்கு ஆதி மூர்த்தி, மயானேஸ்வரர். சங்கார அவசரத்தில் காட்சியளித்தவர்.

புராண வரலாறு

இத்தலத்திற்கு வரலாறு வடமொழியிலோ தென் மொழியிலோ தனியாக அமையவில்லை. சலந்தராசுரனைக் கொன்ற ஒன்றே இத்தலத்திற்குத் தனிப் பெருமை அளிக்கின்றது. சலந்தராசுரன் வதம் பற்றிப் பத்ம புராணம், கந்த புராணம் முதலியன பொது

112775

வாகக் கூறுகின்றன. இந்திரன்—திருமால்—பிரமன்-முதலிய தேவர்கள் இங்கே அருள் பெற்றது இத்தலத்தின் சிறப்பிற்கு உரிய செய்தியாகும். இத்தலத்தை அடுத்துச் சொரக்குடி என்ற ஊர் இருக்கிறது. சலந்தரனுக்கு அஞ்சிய சுரர் வந்து குடிபுகுந்த இடம் முதலில் சுரர்குடி என்று வழங்கப்பெற்று பின்னர் சொரக்குடி எனத் திரிந்திருக்கலாம். அதன் பக்கத்திலே கங்களாஞ்சேரி என்ற சிற்றூர் இருக்கிறது. கங்காளன் என்ற பெயர் சிவபெருமானைக் குறிக்கும். தேவர்கள் வேண்ட அவர்களுக்கு அருள் செய்ய விரும்பிச் சிவபெருமானாகிய கங்காளன் வந்து சேர்ந்த இடம் கங்காளன்சேரி என்று முன்னர் வழங்கிப் பின்னர் கங்களாஞ்சேரி என்று திரிந்திருக்கலாம். இத்தலத்தை அடுத்துக் கீழ்பால் வாழ்க்குடி என்ற சிற்றூர் இருக்கிறது. திருமால் பிருந்தையின்பால் மையல் கொண்டு அவசமுற்ற நிலையில் தன் கையிலுள்ள ஐம்படைகளும் திக்கிற்கு ஒன்ருய் விழுந்த பொழுது வாள் விழுந்த இடம் வாட்குடி என்று முன்னே வழங்கிப் பின்னர் வாழ்க்குடி என்று ஆயிற்றுப் போலும். திருமாலின் வில் விழுந்த இடமே விற்குடி என்று வழங்கி வந்திருக்கவேண்டும். அவ்விடத்தே திருமால் வழிபட்ட மூர்த்தி அமர இத்தலத்திற்கு விற்குடி என்று பெயர் வழங்கப்பெற்றிருக்கவேண்டும். கோயிலின் முன்புறமுள்ள சங்க தீர்த்தம் திருமாலின் சங்கு வீழ்ந்த இடத்தை உணர்த்துவதாகும். பின்புறம் உள்ள சக்கர தீர்த்தம் திருமாலின் சக்கரம்விழுந்த இடத்தை உணர்த்துவதாகும்.

சலந்தரன் வரலாறு

சிவபெருமான் கைலை மலையில் உமாதேவியோடு வீற்றிருந்தார். இந்திரன் நானே பெரியவன் என்ற ஆணவத்துடன் சிவபெருமானைத் தரிசிக்கக் கைலை நோக்கிச் சென்றான். இந்திரனது மன நிலை அறிந்த சிவபெருமான் அவனது கர்வத்தை அடக்குவதற்காகத் தான் ஒரு துவாரபாலகன் வேடம் தாங்கி இந்திரன் வரும் வழியில் நின்றார். இந்திரன் அவரைக் கண்டு "ஈசனைத் தரிசிக்க இது சமயமா" என்று கேட்டான். சிவபெருமான் வாய் பேசாது நிற்ப, இந்திரன் சினந்து தனது வச்சிராயுதத்தால் அவரை மோதினான். வ ச் சி ரா யு த ம் பொடிப்பொடியாய்ப் போயிற்று. சிவபெருமான் தன்னுருக்கொண்டு கோபத்துடன் நின்றார். இந்திரன் கண்டு அஞ்சிப் பிழையைப் பொறுத்தருளவேண்டினான். பெருமானும் கருணை கூர்ந்து அவனுக்குப் படையும் விடையும் கொடுத்து அனுப்பினார். தனது கோபக் கனலை எடுத்து உவர்க்கடலில் எறிந்து இருப்பிடம் சென்றார்.

கடலில் விழுந்த கனல் ஒரு வலிமை பெற்ற மகவாகத் தோன்றிற்று. வருணன் அம்மகவினை எடுத்து வளர்த்து வந்தான். ஒருமுறை பிரமன் வருணனிடம் வந்தான். வருணன் தான் வளர்க்கும் அந்தக் குழந்தையைப் பிரம தேவனிடம் கொடுத்தான். பிரமன் அக் குழந்தையை மடிமேல் வைத்திருந்தபோது குழந்தை பிரமனது தாடியைப் பிடித்து இழுத்தது. பிரமன் வலி பொறுக்காது கண்ணீர் சிந்தினான். அந்நீர் அக்குழந்தையின் மேல் பட்டது. பிரமன் அக் குழந்தைக்கு ஜலந்தரன் எனப் பெயரிட்டுச் சென்றான்.

ஜலம் + தரன் என்ற இரு சொற்களுக்கும் தண்ணீரைத் தரித்தவன் என்றும் தண்ணீரால் தாங்கப் பெற்றவன் என்றும் இரு பொருள் கூறலாம். பிரமனது கண்ணீரைத் தன் மீது தரித்தலாலும் கடல் நீரால் இவன் தாங்கப் பெற்றதாலும் ஜலந்தரன் என்ற பெயர் அவனுக்கு ஏற்றதேயாகும்.

பிரமனிடத்தில் வரங்கள் பல பெற்ற சலந்தரன் பூமியில் வந்து அரக்கர்களோடு சேர்ந்து திக்கு விஜயம் செய்து வெற்றி பெற்ருன். அவுணர்கம்மி யனே அழைத்துத் தனக்குத் தக்கதோர் கோநகரை அமைத்துக்கொண்டான். அதற்குச் சலந்தரபுரம் என்று பெயரிட்டான். அதில் வீற்றிருந்து அரசு செலுத்திய சலந்தரன் காலநேமி என்ற அவுணன் மகள் பிருந்தையை மணந்து இன்புற்று வாழ்ந்தான். தன் வர பலத்தாலும் உடல் வலியாலும் பெரும் புகழாலும் செருக்கடைந்த சலந்தரன் தேவர்களே யெல்லாம் அலேக்கக் கருதிச் சென்ருன். அவன் வரு கையைக் கேட்ட தேவர்கள் அஞ்சி ஓடி ஒளித்தனர். தேவர்கள் கைலே மலேயில் அடைக்கலம் புகுந்திருப் பதைத் தன் ஒற்றர் மூலமாக அறிந்த சலந்தரன் சீற்றங்கொண்டு போர்க்கோலம்பூண்டு கைலேமலேயை நோக்கி எழுந்தான்.

இதைக் கண்ட அவன் மனேவி பிருந்தை சிவ பெருமானின் பெருமைகளே எடுத்துக்கூறிக் கைலே மலேநோக்கிப் போருக்கு எழக்கூடாது என மறுத்தாள். ஊழ்வலி சலந்தரனேப் பிடர் பிடித்து உந்தக் கைலே நோக்கிச் சென்ருன். இந்திரன் முதலானேர் சிவ பெருமானே அடைந்து சலந்தரன் வருகையை முறை

விட்டார்கள். பெருமான் அபயமளிக்கும் திருக்கரத்தை அமைவுறக் காட்டி "அஞ்சேல்" என்று அருள் செய்தார். பின்னர் சிவபெருமான் ஒரு கிழ அந்தணர் வேடந்தாங்கிச் சலந்தரன் முன் சென்று அவனுடன் உரையாடினர். அவன் தான் கைலைக்குச் செல்லும் நோக்கத்தைக் கூறக் கேட்ட அந்தணர், "நீ கைலைக் குச் செல்வது இருக்கட்டும்; நான் சொல்லும் ஒரு சிறு தொழிலை நீ செய்வாயோ?" என்று கேட்டார். சலந்தரன், செருக்குடன் "எதையும் செய்து முடிக்கும் பேராற்றல் எனக்கு உண்டு" என்று கூறினன்.

உடனே முனிவர் தன் காற் பெருவிரலால் மண்ணில் ஒரு வட்டமிட்டு, "நீ இவ்வட்டத்தைப்பெயர்த்து எடுத்து உன் தலைமேல் தாங்கு" என்று கூறினர் சலந்தரன் அதைக் கேட்டு நகைத்து அச்சக்கரத்தை அனாயாசமாக எடுக்க முயன்றான். ஆனல் அதை எடுப்பது அவனுக்கு ஓர் அரிய செயலாய் இருந்தது. பின்னர் பெரு முயற்சி செய்து அச்சக்கரத்தை எடுத்துத் தன் தலைமேல் தாங்கினன். அவ்வாழி அவனுடலை இரு கூருகப் பிளந்து தள்ளிச் சோதி வடிவமாக இறைவனின் திருக்கரத்தில் சென்று அமர்ந்தது.

இஃது இவ்வாருக, சலந்தரன் திரும்பி விரைவில் வராமையால் பெருங் கவலை கொண்டு அவன் மனைவி அமர்ந்திருந்தாள். இந்தப் பிருந்தையின் கற்பு அழிந்தால்தான் சலந்தராசுரன் அழிவான் என்ற சாப மொழி ஒன்றிருந்தது. அதனலேயே திருமால், இந்திரன் முதலிய தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பிருந்தையின் கற்பை அழிக்க முற்பட்டார்.

அதனால் உலகுயிர்களைச் சலந்தரன் கொடுமையினின்றும் பிழைக்கும்படிச் செய்யக் கருதினர். இக்காரணத்தால் பிருந்தையினிடம் நீண்ட நாளாகப் பிரேமை கொண்டவர்போல் இருந்த திருமால் அவள் முன் ஒரு தவ யோகிபோல் சென்றார். பிருந்தை அந்த யோகியினிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தாள். யோகி சலந்தரன் இரு கூறாகி இறந்துபட்டதைக் கூறி அவள் முன் இரு கூறாகிய சலந்தரனின் உடல் வரும்படிச் செய்தார். பிருந்தை தன் கணவன் உயிர் பெற்று எழுமாறு அருள் செய்யும்படி யோகியாரை வேண்டினள். அம்மாய யோகி சலந்தரனின் உடற் கூறுகளை ஒன்றாகச் சேர்த்துத் தான் அவ்வுடலிற் புகுந்து சலந்தரனே மீண்டும் உயிர் பெற்றுவிட்டான் என்று பிருந்தை நம்பும்படிச் செய்தார்.

திருமால் சில நாள் பிருந்தையுடன் இருந்து இன்ப நுகர்ச்சியைப் பெற்றார். சில நாட்களில் தன்னுடன் வாழ்பவன் மாயக் கணவன் என்பதை உணர்ந்த பிருந்தை தீப் புகுந்து உயிர் நீத்தாள். பிருந்தையின் பிரிவால் சோகமுற்ற திருமால் மன மயக்கம் கொண்டு அவள் வெந்து நீறான அவ்விடத்திலேயே வீழ்ந்து புரண்டார். இதனை உணர்ந்த பார்வதிதேவி தனது இடக்கைச் சிறு விரலில் இருந்து ஒரு விதையை உண்டாக்கி அதனைச் சிவபெருமானிடம் கொடுத்தார். சிவபெருமான் அதனைப் பிரமதேவனிடம் கொடுத்தார். பிரமதேவர் அவ்வித்தினைப் பிருந்தை இறந்த இடத்தில் தெளித்து நீர் வார்க்க அங்கே துளசிச் செடி உண்டாயிற்று. அத்துளசியைத் தன்மேல் அணிந்து மையல் தீர்ந்த திருமால் தன் பழைய நிலையை அடைந்தார்.

திருப்பணி

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனிதன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தாலெனநினையும் அவர்க்கும்
உளனெங்கும் இலன்இங்கும் உளனென்பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தில் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண ஒண்ணுத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன் அன்பர்க்கே.

(சித்-சுப-செ. 325.)

பரம்பொருளாகிய இறைவன் சகலான்மாக்களும் உய்யும் வண்ணம் அருவுருவத் திருமேனியாகிய இலிங்கத் திருமேனி கொண்டு பல புண்ணியத் தலங்களிலே வீற்றிருந்து அருளுகின்றுன். அப்படி வீற்றிருந்தருளும் பெருமானுக்கு ஆகம விதிப்படி ஆலயம் எடுத்து அருச்சிப்பது, தான் ஈடேறுவதற்கன்றி உலகமும் ஈடேறுவதற்குச் செய்யும் சிறந்த சிவ புண்ணியமாகும். செடியின் வேர்ப்பாகத்தே வார்க்கப்படும் நீர் மேற்பாகத்திற்குச் சென்று, இலை, பூ, காய், கனிகளைத் தருவது போல, இறைவனுக்குச் செய்யும் அபிடேக ஆராதனைகள் அனைத்தும் உலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் இன்பம் அளிப்பதற்கு உரிய செயல்களாகின்றன. இதனுலேயே ஊர்கள் தோறும் திருக்கோயில்கள் அமையவேண்டுமென்று ஆன்றோர்கள் எடுத்தோதினர். அப்ப மூர்த்திகளும் கோயிலில்

லாத ஊரை அடவி காடு என்கிறுர்கள். சிவாலயங்களில் நிகழ வேண்டிய நித்திய நைமித்திகங்கள் முட்டுப்படுவதால் நாடு பல துறைகளிலும் கெடும் என்பதை,

" முன்னவனுர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரை த்தானே "

என்று திருமூலதேவ நாயனுரும் கூறிச் சென்றுர். அறுபான்மும்மை நாயன்மாருள்ளும் காரி நாயனுர், பூசலார், காடவர்கோமான், வாயிலார், கோச்செங்கட் சோழர், சண்டேசுர நாயனுர் ஆகிய பெருமக்கள் திருக்கோயில்கள் எடுப்பதையே, தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு திருக்கோயில்களை அமைத்து வழிபட்டுப் பெரும் பதம் பெற்றுர்கள் என்பதைப் பின்வரும் சேக்கிழார் பெருமான் திருவாக்குகள் வலியுறுத்துகின்றன.

" சங்கரனுர் இனிதமரும் தானங்கள் பல சமைத்தார் "
(காரியார்)

" நன்றென மனத்தனுதிலே நல்லஆலயந்தான்
செய்த நின்றவூர்ப் பூசலார் " (பூசலார்)

" காடவர்கோமான் கச்சிக்கற்றளி எடுத்துமுற்ற "
(காடவர்கோன்)

" மறவாமை யாலமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி "
(வாயிலார்)

" பூதநாதன் தான்மகிழ்ந்து பொருந்தும்
பெருந்தண் சிவாலயங்கள்
காதலோடும் பலஎடுக்கும் தொண்டு
புரியும்கடன் பூண்டார் " (கோச்செங்கட்சோழர்)

“ செங்கண் விடையார் திருமேனி
மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்கநீடு கோபுரமும் சுற்ருலயமும்
வகுத்தமைத்தார்” (சண்டேசுர நாயனுர்)

நம் தமிழகத்தே கோயில்கள் அமைந்த வரலாற்றை உற்று நோக்கும்போது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே பல தெய்வங்களுக்கும் கோயில்கள் எடுக்கப் பெற்ற செய்தி புலனுகின்றது. எந்த வடிவில் மக்கள் எப்பெயரிட்டு வழிபடினும் அந்த உருவில் ஏக நாயகனுகிய இறைவன் தோன்றி அருள் பாலிக்கின்ருன் என்பது சாத்திர முடிவு.

“ யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகிஆங்கே
மாதொரு பாகனுர் தாம் வருவர்..............”

என்பது சித்தியார்.

“ கண்டவடி வெல்லாம் நின்காட்சி
என்றே கைகுவித்துப்
பண்டும் இன்றும் நின்றஎன்னைப்
பார்த்திரங்க வேண்டாவோ ”

என்பது தாயுமானசுவாமிகளின் திருவாக்கு.

சிலப்பதிகாரத்தில்,

“ அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல்வாயில்
உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக் கோட்டம்......”

என்ற கோயில்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த
தாக இளங்கோவடிகள் கூறுகின்றார். இவற்றுள்
ஊர்க்கோட்டம் என்பது சிவபெருமான் எழுந்தருளி
யிருக்கின்ற கோயிலை உணர்த்துகின்றது. "சுடுமண்
ஓங்கிய நெடுநிலை மாடம்" என்ற தொடரை நோக்கும்
போது அக்காலத்தே சோழ நாட்டில் அமைந்த
கோயில்கள் எல்லாம் சுட்ட செங்கற்களால்தான் கட்
டப்பட்டன என்பது புலனாகின்றது. அப்படிப்பட்ட
கோயில்கள் நெடுங்காலம் முதற்கொண்டே "மண்
டளிகள்" என்று வழங்கப் பெற்றன. இன்றும் திரு
வாரூர்ப் பெருநகரில் கிழக்கு வீதியில் தனித் தலமாய்
அமைந்திருக்கும் தூவாயார் கோயில் பரவையுள் மண்
டளி என்றே வழங்கப் பெறுகின்றது.

இப்படிச் சோழ நாட்டிலும் பிற இடங்களிலும்
அமைந்த ஆலயங்களையெல்லாம் சுமார் கி. பி. 6 ம்
நூற்றாண்டு தொடங்கிக் கற்றளிகளாகப் புதுப்பிக்கும்
பெரும் பணியினைப் பெரு வேந்தர்கள் மேற்கொண்
டார்கள். கருங்கல் கொண்டு கற்றளிகள் அமைக்கும்
பெரும் செயலை முதல் முதலில் பல்லவ மன்னர்கள்
மேற்கொண்டனர். பின்னர் சோழப் பெரு வேந்தர்
கள் சோழ நாடு எங்கும் கருங்கல் தளிகளையே
அமைப்பாராயினர். கோச்செங்கட் சோழன் எண்
தோள் ஈசனுக்கு எழுபது எழில் மாடக் கோயில்களை
அமைத்த செய்தி அருட் பனுவல்களால் அறியப்படு
கின்றது. கி. பி. 10 ம் நூற்றாண்டில் வாழ்ந்த இராஜ
ராஜ சோழன் தஞ்சையில் பெருவுடையார் கோயிலை
அமைத்திருப்பது இன்றுள்ள உலக அதிசயங்களில் ஒன்
றாய்த் திகழ்கின்றது.

மூவேந்தரது ஆட்சிக்குப் பிறகு இத்தகைய சிவப் பணி குறைபடுவதாயிற்று. வேற்று நாட்டாரது வருகையாலும் வேற்றுச் சமயத்தவர்களது சூழ்ச்சி களாலும் அரசாங்கம் சமயத்திற்குத்தக்க இடம் கொடுக்காததாலும் ஆலயங்களை எடுப்பார் அருகிப் போயினர். பழம் பெருங் கோயில்களுக்குப் பண் டைப் பெரு வேந்தராலும் பிறராலும் அளிக்கப் பெற்ற தேவ தானங்களைக் கண்காணித்து வந்தவரும் தன்னல மிக்கவர்களாய்ப் போகவே தமிழ் நாட்டுக் கோயில்கள் கேட்பாரற்றவைகளாயின.

இந்த நெருக்கடியான காலத்தில் தமிழ் நாட்டுப் பெருங் கோயில்களுக்குப் புத்துயிர் அளிக்கத் தனவைசியர் குலத்துப் பெருமக்கள் முற்பட்டனர். எங்கெங்கே பாடல் பெற்ற பழம்பதிகள் காணப்படுகின்றனவோ அங்கங்கே அவர்கள் நாட்டம் வைக்கத் தொடங்கினர்கள். கேட் பாரற்றுக் கிடந்த பழம் பெருமை வாய்ந்த தலங்க ளெல்லாம் கயிலாயம் எனத் திகழத் தொடங்கின. தென்னாட்டில் சைவ சமயமும் சமய நூல்களும் சிவா லயங்களும் சமயப் பற்றற்ற இக்காலத்திலும் சிறந்து விளங்குவது அன்னவர்களின் பெருந் தொண்டி னல்தான்.

இத்தகைய பெருமை வாய்ந்த தன வைசிய குலத்திலே தோன்றிய ஒரு பெரும் குடும்பத்தார் இராமநாதபுரம் ஜில்லா, பள்ளத்தூர் சொ. மு. அ. மெய் யப்பச் செட்டியார் குடும்பத்தார் ஆவார்கள். இவர் களே பழம் பெருமை வாய்ந்த விற்குடி வீரட்டானேஸ் வரரது ஆலயத் திருப்பணியிலீடுபட்டுப் பல லட்சம் ரூபாய்களைச் செலவு செய்து விற்குடியைப் பல துறை

112775
O 93:38. ௮1193
N55

களிலும் விளக்கமுறச் செய்திருக்கிருர்கள். இச்சீரிய திருப்பணி கி. பி. **1917**-ல் தொடங்கப் பெற்று **1931**-ல் நிறைவுற்றது. பிரஜோத்பத்திஞ சித்திரைமீ **17**உ குருவாரத் தன்று (**30—4—1931**) மகா கும்பாபிஷேகம் நிறைவுற்றது. இன்றும் அக்குடும்பத்தில் வந்துள்ள சொ. மு. அ. மெ. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் அறநிலேயப் பாதுகாப்புக் கழகத்தாரால் நியமிக்கப் பெற்று ஏக டிரஸ்டியாகவும், சொ. மு. அ. மெ. அரு. இராமசாமிச் செட்டியார் என்கிற நடேசன் செட்டியார் அவர்கள் ஆலயத்தின் திருப்பணி தர்மகர்த்தராகவும் இருந்து கோயிலேச் செம்மையான முறையில் பரிபாலித்து வருகிருர்கள். கோயிலின் சுற்றுச் சுவர்களும் மண்டபங்களும் பிறவும் சிறந்த கருங்கல் திருப்பணியாகவே அமைந்திருக்கின்றன. விமானங்களும் கோபுரமும் சிற்பத் திறத்துடன் காட்சியளிக்கின்றன. நீண்ட காலம் பழுதுருதவாறு அவ்வளவு வலிமையாக ஆலயம் நிறுவப் பெற்றிருக்கிறது.

கல்யாணியிருப்பிலிருந்து விற்குடிக்குச் சுமார் 1 மைல் நீளத்தில் இக்குடும்பத்தாரே சாலே அமைத்து இரு மருங்கினும் தென்னே மரங்களே வளர்த்து வழிப் போக்கர்களுக்குப் பேருதவி புரிந்திருக்கிருர்கள். விளப்பாற்றைத் தாண்டி ஊரை அடைவதற்குப் பல்லாயிரம் ரூபாய் செலவில் சிறந்ததோர் பாலம் அமைத்தவர்களும் இக்குடும்பத்தவர்களே.

தமிழகத்தே உள்ள பழம் பதிகளின் பெயர்கள் இடைக்காலத்தே பல காரணங்களாலும் மறைந்து போகும் நிலேக்கு வந்து விட்டன. அப்படியே விற்குடியின் பெயரும் மக்கள் சிந்தனேயைவிட்டு

மாறிவிட்டது. விற்குடிக்கு அண்மையில் புகைவண்டி நிலையத்தை அமைத்த அந்நாள் எஸ். ஐ. ஆர். கம்பெனியார் விற்குடி என்று பெயர் அமைக்காது "வெட்டாறு" என்று அமைத்திருந்தனர். இந்நிகழ்ச்சி தமிழ் மக்களது ஆஸ்திக உள்ளங்களில் அழியாக் கவலையை அளித்துக்கொண்டிருந்தது. திருப்பணிக் குடும்பத்தார் பெரு முயற்சி செய்து புகைவண்டி நிலையத்திற்கு "விற்குடி" என்ற பெயர் அமைக்கும்படிச் செய்தார்கள்.

இலக்கியம்

சிவத் தலங்களுக்கெல்லாம் வட மொழியிலும் தமிழ் மொழியிலும் தலபுராணங்கள் அமைந்திருப்பதுபோல இத்தலத்திற்குப் புராணங்கள் அமையவில்லை. சலந்த ராசுரவதம் இத்தலத்தில் நிகழ்ந்தமையால் இது அட்ட வீரட்டானங்களில் ஒன்ருய் விளங்குகிறது. சலந்தரா சுரவதம் பத்ம புராணம் கந்தபுராணம் முதலிய நூல் களில் ஓதப் பெறுவதால் அவை யாவும் இத்தல வர லாறு கூறுகின்றவைகளாகவே அமைகின்றன. இவ் வாறே திருவாசகம், பட்டினத்தார் அருளிச் செய்த கோயில் நான்மணி மாலை (11-ம் திருமுறை) முதலிய நூல்களிலும் சலந்தரன் வதம் பற்றிய செய்திகள் வருகின்றன.

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரத்தில் ஒரு பதிகமும், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் அடைவுத் திருத்தாண்டகத்தில் இரண்டு பாடல்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் திருப்பரங் குன்றத் திருப்பதிகத்தில் வைப்பாக வரும் ஒரு பாட லும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத் திருச் சாழலில் ஒன்றும், அருணகிரிநாத சுவாமி களின் திருப்புகழ் ஒன்றும், பெரிய புராணத்தில் திரு ஞான சம்பந்த சுவாமிகளின் வரலாற்றில் சுவாமிகள் விற்குடி மேவியதாகச் சேக்கிழார் சுவாமிகளால் பாடப் பெற்ற பாடல் ஒன்றும், இத்தலத்தின் பெயரும் வரலாறும் அமையப் பெற்ற பாடல்களாக உள்

ன. இவற்றைத் தவிர இக்காலத்தே வர கவிகள் எனப் பாடி வரும் இரு அந்தணச் சிறுவர்களில் எஸ். வி. சேதுராமன் என்பவராற் பாடப்பெற்ற அட்ட வீரட்டத்தை விளக்கும் முருகன் திருப்புகழும் விற்குடி வேலன் திருப்புகழும் விற்குடி வேலன் வாழ்த்தும் இத்தலத்திற்குரிய பாடல் களாக அமைந்துள்ளன.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

திருவிற்குடி வீரட்டம்

பண் நட்ட ராகம்] [2-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வடிகொள் மேனியர் வானமா
மதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர்
கொடியினர் உடைபுலி அதள்ஆர்ப்பர்
விடையதேறும்எம் மானமர்ந்
தினிதுறை விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல்
லார்தமை அருவினை அடையாவே. 1

களங்கொள் கொன்றையும் கதிர்விரி
மதியமும் கடிகமழ் சடைக்கேற்றி
உளங்கொள் பத்தர்பால் அருளிய
பெருமையர் பொருகரி உரிபோர்த்து
விளங்கும் மேனியர் எம்பெரு
மானுறை விற்குடி வீரட்டம்
வளங்கொள் மாமல ரால்நினைந்
தேத்துவார் வருத்தம தறியாரே. 2

கரிய கண்டத்தர் வெளியவெண்
பொடியணி மார்பினர் வலங்கையில்
எரியர் புன்சடை யிடம்பெறக்
காட்டகத் தாடிய வேடத்தர்
விரியும் மாமலர்ப் பொய்கைசூழ்
மதுமலி விற்குடி வீரட்டம்
பிரிவி லாதவர் பெருந்தவத்
தோரெனப் பேணுவ ருலகத்தே. 3

பூதஞ்சேர்ந்திசை பாடலர்
ஆடலர் பொலிதர நலமார்ந்த
பாதஞ் சேர்இணைச் சிலம்பினர்
கலம்பெறு கடலெழு விடமுண்டார்
வேதம் ஓதிய நாவுடை
யானிடம் விற்குடி வீரட்டம்
சேரும் நெஞ்சினர்க்கு அல்லதுண்
டோபிணி தீவினை கெடுமாறே. 4

கடிய ஏற்றினர் கனலன
மேனியர் அனலெழ ஊர்மூன்றும்
இடிய மால்வரை கால்வளைத்
தான்தனது அடியவர் மேலுள்ள
வெடிய வல்வினை வீட்டுவிப்
பானுறை விற்குடி வீரட்டம்
படிய தாகவே பரவுமின்
பரவினுற் பற்றறும் அருநோயே 5

பெண்ணேர் கூறினர் பெருமையர்
சிறுமறிக் கையினர் மெய்யார்தே
அண்ணல் அன்புசெய் வாரவர்க்கு
எளியவர் அரியவர் அல்லார்க்கு

விண்ணில் ஆர்பொழில் மல்கிய
மலர்விரி விற்குடி வீரட்டம்
எண்ணிலாவிய சிந்தை யினர்தமக்கு
இடர்கள் வந்து அடையாவே. 6

இடங்கொள் மால்கடல் இலங்கையர்
கோன்தனை இகலழி தரவூன்று
திடங்கொள் மால்வரை யானுரை
யார்தரு பொருளினன் இருளார்ந்த
விடங்கொள் மாமிட றுடையவன்
உறைபதி விற்குடி வீரட்டம்
தொடங்கு மாறிசை பாடிநின்
றார்தமைத் துன்பநோய் அடையாவே. 7

செங்கண் மாலொடு நான்முகன்
தேடியும் திருவடி அறியாமை
எங்குமாரெரி யாகிய இறைவனை
யறைபுனல் முடியார்ந்த
வெங்கண் மால்வரைக் கரியுரித்
துகந்தவன் விற்குடி விரட்டம்
தங்கையால் தொழுது ஏத்த
வல்லாரவர் தவமல்கு குணத்தாரே.

பிண்ட முண்டுழல் வார்களும்
பிரிதுவ ராடையர் அவர்வார்த்தை
பண்டும் இன்றுமோர் பொருளெனக்
கருதன்மின் பரிவுறுவீர் கேண்மின்
விண்ட மாமலர்ச் சடையவன்
இடமெனில் விற்குடி விரட்டம்
கண்டு கொண்டடி காதல்
செய்வாரவர் கருத்துறுங் குணத்தாரே. 9

விலங் கலேசிலை யிடமென
உடையவன் விற்குடி வீரட்டத்
திலங்கு சோதியை யெம்பெரு
மான்றனை யெழில்திகழ் கழல்பேணி
நலங்கொள் வாழ்பொழிற் காழியுள்
ஞானசம்பந்தனற் றமிழ் மாலை
வலங்கொ டேயிசை மொழியுமின்
மொழிந்தக்கால் மற்றது வரமாமே 10

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

அடைவுத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம் கடவூர் வீரட்டானம்
காமரு சீரதிகை
மேவிய வீரட்டானம் வழுவை வீரட்டம் வியன்பறியல்
வீரட்டம்விடை யூர்திக்குஇடமாம்
கோவனகர் வீரட்டம் குறுக்கை வீரட்டம் கோத்திட்டைக்குடி
வீரட்டான மிவைகூறி
நாவினவின்று ரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்றமரும் சிவன்றமர்என் றகல்வர் நன்கே. 1

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன்செம்பங்
குடி நல்லக் குடி நளி நாட்டியத்தான்குடி
கற்குடிதென் களக்குடிசெங் காட்டங்குடி
கருந்திட்டைக்குடி கடையக்குடிகாணுங்கால்
விற்குடிவேள் விக்குடிநல் வேட்டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடிமாகுடி தேவன்குடி நீலக்குடி
புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே. 2

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

திருப்பரங்குன்றம்

திருச்சிற்றம்பலம்

*கோத்திட்டையும் கோவலும் கோயில்கொண்டீர்
உமைகொண்டுழல் கின்றதோர் கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக் குத்தித் தெருவேதிரியும் சிலபூதமும்
நீரும்திசை திசையன
சோத்திட்டு விண்ணோர் பலரும்தொழநும் அரைக்
கோவணத் தொடொரு தோல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும் பாம்படி
கேள்உமக் காட்செய அஞ்சுதுமே.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்

திருச்சாழல்

திருசிற்றம்பலம்

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன்று அருளியவா றென்னேடி
நலமுடைய நாரணன்றன் நயனம்இடந்தான் அடிக்கீழ்
அலராக விடஆழி அருளினன்காண் சாழலோ.

பெரியபுராணம். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்

புராணம் செ. 497

சொற்பெரு வேந்தரும் தோணிமூதூர்த்
தோன்றல்பின் காதல் தொடரத்தாமும்
பொற்புகலூர் தொழச் சென்றணைந்தார்
புகலிப்பிரானும் புரிந்தசிந்தை

---

* விற்குடி

விற்குடிவீரட்டம் சென்றுமேவி விடையவர்
பாதம்பணிந்து போற்றிப்
பற்பலஆயிரம் தொண்டரோடும் பாடலனுன்
மறைபாடிப் போந்தார்.

பட்டினத்தடிகள் அருளிச் செய்த கோயில் நான்மணிமாலை

செ. 40 (11-ம் திருமுறை)

"..................................
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்
சலந்தரன் தடிந்த தண்டம் போற்றி
.................................."

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

திருவிற்குடித் திருப்புகழ்

தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன
தத்த தத்ததன தத்த தத்ததன—தந்ததான.

சித்தி ரத்திலுமி குத்த பொற்பவள
மொத்த மெத்தஅழ குற்ற குத்துமுலே
சிற்ப சிற்பமயி ரொத்த சிற்றிடைய வஞ்சிமாதர்

சித்த மத்தனேயு முற்ற ளப்பகடல்
மெய்த்த சிற்றுமண லுக்கு மெட்டியது
சிக்கு மைக்குழல்கள் கஸ்தூரிப் பரிம ளங்கள்வீசப்

பத்தி ரத்திலுமி குத்த கட்கயல்கள்
வித்து ருத்தருவ ளேத்த நெற்றிவனே
பற்களேப்பளி ரெனச் சிரித்துமயல் விஞ்சைபேசிப்

பச்சை ரத்நமயி லைப்பொ லத்தெருவி
லத்தி யொத்தமத மொத்து நிற்பர்வலை
பட்டுழைத் துகுழியுற்ற அத்தியென மங்குவேனோ
தத்த னத்தனத் னத்த னத்தனன
தித்தி மித்திமிதி மித்தி மித்திமித
தக்கு டுக்குடுடு டுக்கு டுக்குடென சங்குபேரி
சத்த முற்றுகடல் திக்கு லக்கிரிகள்
நெக்கு விட்டுமுகி லுக்கு சர்ப்பமுடி
சக்கு முக்கிவிட கட்க துட்டசுர ரங்கமாள
வெற்றி யுற்றகதிர் பத்தி ரத்தையரு
ளிச்சு ரர்க்கதிப திப்ப தத்தையுறு
வித்த ளித்துமதி பெற்ற தத்தைமண முண்டவேலா
வெட்கிடப் பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லைத்துசிறை வைத்து முத்தர்புகழ்
விற்குடிப் பதியி லிச்சை யுற்று மகிழ் தம்பிரானே

அட்ட விரட்டத்தை விளக்கும் முருகன் திருப்புகழ்

தானந்தன தனத்தன தந்தன தானன
தானந்தன தனத்தன தந்தன தானன
தானந்தன தனத்தன தந்தன தானன—தனதான

வேதன்சிர மெடுத்தது கண்டியி லாணவ
மேவந்தகன் வதைத்தது திண்புகழ் கோவலில்
மேலும்புர மெரித்தது நன்றுயர் சீரதி கையிலேதான்
மீனங்கொடி பிடித்தவ னங்கச னாகிய
காமன்றிகழ் குறுக்கையில் விஞ்சிய மாவலி
வேழம்பட வுரித்ததன் நன்கணி சேவகம் வழுவூரில்
ஏதந்தழு வுதட்சன்ம சஞ்செய வாவென
நீளன்புட னழைத்திலன் வஞ்சக மாமனோர்
ஈனன்றலை யறுத்தது செந்தண ரோதுப றியலூரில்

ஏமன்றனை யுதைத்தது நன் கட வூரினில்
வீரம்பெற எதிர்த்தச லந்தரன் மாய்வுர
ஏமஞ்செறி யவிற்குடி யென்றந லூரினில்–விடலாகும்

மாதந்திர ராக்கர்க ளின்குலம் வேரற
லோகம்புக ழநிக்கிர கஞ்செயும் ரீதியில்
வானும் பர்கள் நலப்பட இந்தம கோதவி–செயுமீசன்

மாயன் பணி சிறப்புடை சங்கர னுரிரு
காதின்கணின் மறைப் பொருளின் புறவோதிய
வாயின்புக ழுரைத்திடு பண்புறு வாயிலி-யடிநாயேன்

தாதன்பெரு மதிப்பொடணை ந்திடு தாய்குரு
நாதன் றமர் செகத்தினி லென் றுணை யாவது
தாரம்பதி பெறற்கரு மைந்தனும் யாவரு-மொருநீயே

தாளம்புயம் நிகர்த்தது தந்தருள் வாய்மலர்
நீபம் புனைகுறப் பெண்வி ரும்பிய வேலவ
தாபந்தவிர் திறத்திலு யர்ந்திடு வானவர்-பெருமானே

முருகனடிமை S. V. சேதுராமனுக்குக் கனவில் கூறப்பட்ட
இறைவாக்கு

விற்குடி வேலவன் திருப்புகழ்

தனந்தன தானத் தனதான

சலந்தரை கானற் கனல்வானம்
சமைந்திடு காயச் சிறைவீய
நலந்தர வேலுற் றடியேனை
நமன்குறு காமற் பொரவாராய்
சலந்தர னழிக் கரனுன
சலந்தர னுரிக் கொருபாலா
பிலந்தனில் நேரிற் பெரியோனே
பிருந்தை மயானப் பெருமாளே

விற்குடி வேலவன் வாழ்த்து.

தத்தன தானன தத்தன தானன

நற்றவர் ஞானியர் நட்டவர் நாயகன்
வெற்றிகொள் வேலவன் விற்குடி மேவிய
கொற்றவன் மாபதி கொக்கறு கோகுறை
அற்றமி லாரமு தற்புதன் வாழியே

—பாடியவர் முருகனடிமை S. V. சேதுராமன்

முற்றிற்று



ஆலய அமைப்புப் பட விளக்கம்

1. கோபுர வாயில்
2. மஹாலக்ஷ்மி
3. சுப்பிரமணியர்
4. ஸ்ரீ ஏலவார்குழல் அம்மை
5. சம்ஹாரமூர்த்தி
6. பள்ளியறை
7. வாகனங்கள்
8. பைரவர் சந்நிதி
9. பைரவர்
10. சனீஸ்வரர்
11. மஹாலிங்கம்
12. நவக்கிரகங்கள்
13. சூரியன்
14. யாகசாலை
15. }
16. } அறைகள்
17. }
18. சந்திரன்
19. மடைப்பள்ளி
20. ஞானதீர்த்தம்
21. பிடாரி
22. மாரியம்மன்
23. தக்ஷிணாமூர்த்தி
24. நர்த்தன விநாயகர்
25. ஸ்ரீ வீரட்டானேஸ்வரர்
26. விஷ்ணுமூர்த்தி
27. பிர்மா
28. துர்க்கை
29. சண்டேஸ்வரர்
30. அனுக்ஞை விநாயகர்
31. பிரதோஷநாயனர்

ஆலய அமைப்புப் படம் விளக்கம்



௨ 23; 38; 21193 · T8
N55

32. பாலசுப்பிரமணியர்
33. பிக்ஷாடனர்
34. சிவகாமசுந்தரி
35. நடராஜர்
36. மாணிக்கவாசகர்
37. சுக்ரவார அம்பாள்
38. சுந்தரமூர்த்தி உற்சவர்
39. சம்பந்தர் ,,
40. திருநாவுக்கரசர் ,,
41. துவார பாலகர்
42. வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர்
43. விநாயகர்
44. துவார பாலகர்
45. ஆஞ்சநேயர்
46. திருஞான சம்பந்தர்
47. திருநாவுக்கரசர்
48. சுந்தரமூர்த்தி
49. மாணிக்கவாசகர்
50. சேக்கிழாரடிகள்
51. பிரதான விநாயகர்
52. சோமாஸ் கந்தரும்-உற்சவர் பஞ்சமூர்த்தி [களும்
53. கொடி மரம்
54. நந்தி
55. கொடிமர விநாயகர்
56. அம்மன் சந்நிதி நந்தி
57. பலிபீடம்
58. இரண்டாவது பிரகாரத்திற்குச் செல்லும் [வழி
59. சங்கதீர்த்தம்
60. தீர்த்தக்கரை விநாயகர்
61. திருமயானேஸ்வரர் ஆலயத்திற்குச் செல் [லும் வழி
62. திருமயானேஸ்வரர் ஆலயம்
63. பிருந்தாவனம்
64. சக்கர தீர்த்தம்

112775

7C
8B
4-10